மாதம்: Feb 2020
இதழ்: 2



அறிவோம் தமிழா!

தென்கச்சி கதைகள்

படித்ததில் பிடித்தது

என்னைப் பற்றி நான்..

குறள் இனிது!

மூளைக்கு வேலை

இளங்கதிர்

மாதம் ஒருமுறை மலரும் MK தமிழ்ப்பள்ளி மாணவர் மின்னிதழ்


ஆசிரியர் பக்கம்



இளங்கதிர் மின்னிதழின் இரண்டாவது மடலுக்கு உங்களை அன்புடன் வரவேற்கிறோம். முதல் இதழுக்கு நீங்கள் தந்த ஊக்கம் எங்களை மேலும் உற்சாகமூட்டியது என்றால் அது மிகையில்லை. மனமார்ந்த நன்றி.

முதல் இதழ் வெளியிட்டதும், புதிதாய் நடை பயில முற்பட்டு ஏதேனும் ஒன்றைப் பிடித்து ஊன்றி எழுந்து நிற்கும் குழந்தை போல ஆயிற்று எங்கள் மனது. அது, இனி விழாது நிற்கவும், தத்தி தத்தி நடக்கவும், நடந்து விழுந்தால் எழுந்து நடக்கவும் இறைவன் அருள வேண்டும். அதற்குத் தேவையானவற்றுள் மிகவும் முக்கியமானது சுற்றியுள்ளோரின் ஊக்கமும் கைத்தட்டல்களும். அவை இருந்தால் தன்னால் முடியும் எனும் நம்பிக்கை விதை அதன் மனதில் ஆழமாகப் பதியும், துளிர்க்கும், தழைக்கும்.

பிப்ரவரி மாதத்திற்கே ஒரு தனிச் சிறப்பு. தன் வாழ்நாளில் 50 வருடங்கள் தமிழுக்காக மட்டுமே அரும் பெரும் தொண்டு செய்து, அழிவின் விளிம்பில் இருந்த பல பொக்கிஷங்களைத் தேடி தேடிக் கண்டெடுத்து அவற்றைப் பதிப்பித்து உயிர்ப்பித்த, தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாத ஐயர் பிறந்த மாதம். [19/02] சென்னையில் அவர் பெயரில் அமைக்கப்பட்ட நூல் நிலையம் இன்றளவும் செயல்படுகிறது. தமிழ் அறிஞர்கள், பெரியோர்கள் கட்டிக்காத்தத் தமிழைப் போற்றுவோம். அடுத்த தலைமுறைக்குக் கொண்டுசேர்க்க நம்மால் இயன்றதைச் செய்வோம்.



தமிழ் அறிஞர் திரு. உ.வே.சா.

தொடர்ந்து நீங்கள் ஆதரவு தரவேண்டுமென கேட்டுக் கொள்கிறோம்.

அன்பன்,
ஆசிரியர்.

பதிப்பாசிரியர்: வெங்கட்

குழு: சுந்தர், அபிராமி, கௌரி, ரமேஷ்

குறள் இனிது

பள்ளி மாணவர்கள் தங்களுக்குப் பிடித்த குறள்களைத் தேர்வு செய்து ஒவ்வொரு இதழிலும் நம்மிடம் பகிர்வர். இந்த மாதம், குறள்களைத் தேர்வு செய்தது: நிலை 2A



கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக. (ஷ்ருதிஹா நந்தகுமார்)


பிழை இல்லாதவற்றைத் தனது குறைகள் நீங்குமளவுக்குக் கற்றுக்கொள்ள வேண்டும். கற்ற பிறகு அதன்படி நடக்கவேண்டும்.

துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை. (விதுலா பரத்குமார்)

நல்ல உணவுகளைச் சமைக்கவும், சமைக்கப்பட்ட உணவுகளை உண்பவர்க்கு இன்னுமோர் உணவாகவும் பயன்படுவது மழையே.

©http://www.valaitamil.com/

பள்ளி நிகழ்வுகள்



பிப்ரவரி


16/02	இடைப் பருவ விடுமுறை
23/02	மீதமுள்ள வகுப்புகளுக்குப் பெற்றோர்-ஆசிரியர் சந்திப்பு

மார்ச்

01/03	ஐந்தாம் மாதத் தேர்வு நடைபெறும்
29/03	ஆறாம் மாதத் தேர்வு நடைபெறும்

அப்துல் ரகுமான் எழுதிய கதவு என்ற இந்தக் கவிதையில், கதவு என்ற ஒற்றைச் சொல்லிலிருந்து கவிஞனின் மனம் எங்கெங்கோ செல்கிறது. அதைப் படிக்கும்போது நம் மனம் அத்தனை தளங்களிலும் தத்துவங்களிலும் உலவ முடிகிறது என்றால் அது அந்த மாபெரும் கவிஞனின் கவித்திறனன்றி வேறில்லை.

படித்ததில் பிடித்தது





கதவு

பித்தன்
கதவை
மூடிக்கொண்டும்
திறந்துகொண்டும்
இருந்தான்

ஏன் இப்படிச்
செய்கிறாய்?
என்று கேட்டேன்

கதவு
திறப்பதற்கா?
மூடுவதற்கா? என்று
அவன் கேட்டான்
அவன் மேலும்
சொன்னான்

கதவுகள்
சில நேரம்
இமைகளாகத்
தெரிகின்றன

சில நேரம்
பூ விதழ்களாக
மலர்கின்றன
சில நேரம்
உதடுகளாகின்றன

பயணம் முடிந்து
வீடு
திரும்புகிறவனுக்கும்
சிறையில்
கிடப்பவனுக்கும்

கதவு திறப்பது என்பது
ஒரே அர்த்தம்
உடையதல்ல

கதவுகளுக்கும்
சிறகுகளுக்கும்
ஏதோ இனம் புரியாத
சம்பந்தம் இருக்கிறது

கதவின்
திறப்பிலும்
மூடலிலும்
கேள்வியும் பதிலும்
இருக்கிறது

கதவுகளில்
சந்திப்பும் இருக்கிறது
பிரிவும் இருக்கிறது

நாம்
கதவு எண்களில்
வசிக்கிறோம்

மூடிய கதவு
உள்ளே இருப்பவற்றின்
மதிப்பை
கூட்டுகிறது

நம்
வீட்டுக்கு மட்டுமல்ல
நமக்கும்
கதவுகள் உண்டு
நாம்
நமக்குள்ளேயே
செல்லவும்
நம்மைவிட்டு
வெளியேறவும்

ஜனனத்தில்
ஒரு கதவு
திறக்கிறது
மரணத்தில்
ஒரு கதவு
திறக்கிறது

இரண்டிலும் நாம்
பிரவேசிக்கிறோமா
வெளியேறுகிறோமா

கதவு தட்டும்
ஓசை கேட்டால்
'யார்' என்று
கேட்காதே
ஒரு வேளை அது
நீயாக இருக்கலாம்.

- **அப்துல் ரகுமான்**

தென்கச்சி கதைகள்

“இன்று ஒரு தகவல்” தென்கச்சி கோ.ஸ்வாமிநாதன் ஐயா வானொலியில் நமக்களித்த வேடிக்கைக் கதைகளின் தொகுப்புகளிலிருந்து :

ஒரு சமயம் கிருஷ்ணதேவ ராயர் சமஸ்தானத்துக்கு ஒரு பெரிய வித்துவான் வந்து சேர்ந்தாராம். “என்னோட போட்டி போட இந்த ஊர்ல யாரும் இருக்காங்களா” ன்னு சவால் விட்டாராம்.

அந்த ஊர்ல இருந்த பெரிய பெரிய வித்துவானெல்லாம், இது என்னடா வம்பாப் போச்சுன்னு நினைக்க ஆரம்பிச்சுட்டாங்க. யாரும் அந்த ஆளோட போட்டி போடுறதுக்கு தயாரா இல்ல. எல்லாரும் நடுங்கிக்கிட்டு இருக்காங்க.

அந்த நேரத்தில ஒருத்தன் மட்டும் தைரியமா முன்னுக்கு வந்தான். அது யாருன்னா தெனாலிராமன். அந்த சமஸ்தானத்துல விகடகவி அவன். “என்ன அனுப்புங்க போட்டிக்கு, நான் ஜெயிச்சுக் காட்டுறேன்”னான். உனக்கு அவ்வளவு தைரியம் இருக்குதா அப்படின்னு கேட்டாங்க. தைரியம் மட்டும்தான் என்கிட்டே இருக்கு. ஆனா தைரியம் இருந்தா அதிர்ஷ்டம் தேடி வரும்கிறது எனக்குத் தெரியும் அப்படின்னான்.

அடுத்த நாள் போட்டி ஆரம்பம் ஆச்சு. அந்த பெரிய வித்துவான் தெனாலிராமன் எதிர்ல வந்து நின்னார். அந்த வித்துவான் ஒரு விரல காட்டுனார். தெனாலிராமன் பதிலுக்கு ரெண்டு விரல காட்டுனான்.

வித்துவான் மூணு விரல காட்டுனார். இவன் உடனே நாலு விரல காட்டுனான். உடனே அஞ்சு விரல காட்டுனார் அவர். தெனாலிராமன் உடனே தன்னோட கைமுஷ்டிய காட்டுனான். கைய மூடிக் காட்டுனான். அவ்வளவுதான் அந்த வித்துவான், கிருஷ்ணதேவ ராயர் காலுல விழுந்தார். நான் தோத்துட்டேன். என்னுடைய தோல்விய ஒத்துக்கறேன் அப்படின்னு சொல்லிட்டார்.

கிருஷ்ண தேவ ராயர் அவர தனியா அழைச்சிட்டுப் போயி என்ன நடந்ததுன்னு விசாரிச்சார். அந்த வித்துவான் விளக்கம் குடுத்தார்: ஆண்டவன் ஒருவன்தான் உண்டுங்கறத விளக்குறதுக்காக நான் ஒரு விரலக் காட்டினேன். அப்படி இல்ல, சக்திய சேர்த்தா, சக்தி சிவன்னு ரெண்டு பேரு உண்டுன்னு உங்க வித்துவான் ரெண்டு விரலக் காட்டினார். மூர்த்திகள் மூன்று பேர் அப்படின்னு நான் மூணு விரலக் காட்டினேன். வேதங்கள் நான்கு சொல்லி அவர் நாலு விரலக் காட்டினார். பஞ்ச பூதங்கள் ஐந்துன்னு நான் அஞ்சு விரலக் காட்டினேன். அதையெல்லாம் அடக்கி ஆளணும்னு சொல்லி கைய மூடி உறுதியா காட்டுனார்.


அடடா உங்க வித்துவானுக்கு எப்பேர்ப்பட்ட அறிவு. அவர்தான் ஜெயிச்சார். நான் தோத்துட்டேன் அப்படின்னார் அவர். அப்படி சொல்லிப்புட்டு அவர் நடைய கட்டினார்.

அதுக்கப்புறம் கிருஷ்ண தேவ ராயர் தெனாலிராமனைக் கூப்பிட்டு என்னப்பா நடந்தது அப்படீன்னு கேட்டாராம். அதுக்கு தெனாலிராமன் விளக்கம் குடுத்துருக்கான்: முதல்ல என்னைக் கொன்னுடுவேன் அப்படீன்னு அந்த வித்துவான் ஒரு விரலக் காட்டுனான். உடனே, உன் ரெண்டு கண்ணையும் தோண்டிப் புடுவேன் அப்படீங்கிறதுக்காக நான் ரெண்டு விரலக் காட்டுனேன். உனக்கு நாமம் போட்டுருவேன்னு மூணு விரலக் காட்டுனான். அத அழிச்சுருவேன்னு நாலு விரலக் காட்டுனேன். உன்ன அறைஞ்சுருவேன்னு அவன் அஞ்சு விரலக் காட்டுனான். நான் உன்னைக் குத்திப்புடுவேன்னு கைய மூடிக் காட்டுனேன் அப்படீன்னான்.

இப்ப பாருங்க. ஜெயிச்சது யாரு? தைரியம் மட்டும் இருந்தா அதிர்ஷ்டம் தானா தேடி வரும்கிறது எவ்வளவு உண்மையாப் போச்சு. அதனால நாம எப்போவும் தைரியமா இருக்கணும்.



அறிவோம் தமிழா




200 நாள்கள் தொடர்ச்சியாக மழையே இல்லாமல் 2019ல் சென்னை மாநகரம் கடந்த 30 வருடத்தில் இல்லாத தண்ணீர்ப் பற்றாக்குறையையும் நெருக்கடியையும் சந்தித்தது. மூன்று நான்கு வாரங்கள் மெட்ரோ தண்ணீருக்காக மக்கள் காத்திருந்தது கொடிய வேதனை.


மழை நீர் காப்போம் !! **தண்ணீர் சேமிப்போம் !!**


நீர் விரயம் தவிர்ப்போம் !!!

காட்சிப் பேழை

பள்ளி மாணவர்களின்
வீட்டுப்பாடங்கள், திட்டப்பணிகள்
உங்கள் பார்வைக்கு...







பிப்ரவரி மாதம் பிறந்தநாள் கொண்டாடும் நம் பள்ளிப் பிள்ளைகள்

அடிப்படை நிலை:1

மஃபாஸா அப்துல் மதீன்
ரோச்செல் பிராங்க்ளின்
இசபெல் ஜான்

அடிப்படை நிலை:2

சாருமதி தண்டபானி
நக்ஷத்ரா ராவ்

நிலை:1

ஆயிஷா அகமது
ஹனியல் நித்திலன் பால்

நிலை:3

நிகில் குமரேசன்

நிலை:4

ஆர்யமன் பூண்டி

நிலை:5

மோனிஷ் ஸ்ரீனிவாஸ் மணிவண்ணன்

பிள்ளைச்செல்வங்கள் அனைவருக்கும்
பிறந்தநாள் வாழ்த்துகள் !!

என்னைப் பற்றி நான்..



பெயர்:

பஷீர்

தமிழ்ப்பள்ளியில் நான்:

பெற்றோர்(ன்)

பொழுதுப்போக்கு:

வானவியல், வாளாவிருத்தல்

முதல் மகிழுந்து:

டொயோட்டா

எனது கனவு விடுமுறை:

நன்றாகத் தூங்கி கனவு காண்பது; மத்திய ஆசியாவில் இருந்தால் இன்னும் உசிதம்.

பிடித்த இசை:

தமிழ்த் திரையிசை

இது இல்லாமல் என் வாழ்க்கை இல்லை..ஏன் :

உணவு. ரெண்டு நாள் சாப்பிடாம இருந்து பாருங்க தெரியும்.

பிடித்த வார நாள்:

வெள்ளி

விரும்பிப்படிக்கும் எழுத்தாளர்:

தமிழ் எழுத்து படித்து நாளாகிவிட்டது. மன்னிக்கவும். விரும்பி வேறு படிப்பார்களாக்கும்? ஆங்கிலத்தில் நோம் சாம்ஸ்கி (நீங்க கேட்டதனால)

நான் சந்திக்க விரும்பும் நபர்:

ஜெ.கி.மாக்ஸ்வெல்

என்னைப்பற்றி யாரும் அறியாத ஒன்று:

அண்ணா பல்கலைக்கழகத்தில் IT படிக்கக் கிடைத்த வாய்ப்பை விட்டுவிட்டு மருத்துவம் படிக்க வந்தேன்.

மூளைக்கு வேலை

எழுத்துக் குவியலில் இருந்து சொற்குவியல்



விளையாட்டு விதிகள்:

எதிரே உள்ள பானையில் இருந்து எழுத்துகளை எடுத்து, எவ்வளவு தமிழ்ச் சொற்கள் உங்களால் அமைக்கமுடியும்? சொற்களைக் கண்டுபிடித்து இந்த இணையத்தளத்தில் பதிவிடுங்கள்
https://www.facebook.com/groups/MKTamilSchool

அதிக சொற்களைக்கண்டுபிடிப்போர் அடுத்த இதழில் கௌரவிக்கப்படுவர்

விடுகதைகள்

1) இவன் வாலுக்கு வையகமே நடுங்கும். அவன் யார்?
2) பிடுங்கலாம். ஆனால் நட முடியாது. அது என்ன?
3) உடம்பில்லா ஒருவன் பத்து சட்டை அணிந்திருப்பான். அவன் யார்?
4) கசக்கிப் பிழிந்தாலும் கடைசிவரை இனிப்பான். அவன் யார்?
5) மரத்தின் மேலே தொங்குவது மலைப் பாம்பல்ல. அது என்ன?
6) கீழே வரும். ஆனால் மேலே போகாது. அது என்ன?
7) மேலே ஏறும். ஆனால் கீழே இறங்காது. அது என்ன?
8) சென்ற தடம் உண்டு. ஆனால் கால்கள் இல்லை. அது என்ன?
9) கைகள் இருக்கும். ஆனால் கை தட்ட முடியாது. அது என்ன?
10) கண் உண்டு. ஆனால் பார்க்க இயலாது. அது என்ன?
11) இளமையில் நெட்டை. முதுமையில் குட்டை. அவன் யார்?

விடைகள் அடுத்தப் பக்கத்தில்

தமிழ் சுடோகு

	அ		ஈ
இ		அ	
		ஆ	
அ			

விளையாட்டு விதிகள்:

- எதிரே உள்ள கட்டங்கள் ஒவ்வொன்றிலும் (அ, ஆ, இ, ஈ) முதலான நான்கு எழுத்துகள் மட்டுமே எழுதலாம்.
- ஒவ்வொரு வரிசையிலும்(row) பத்தியிலும் (column) ஒரு எழுத்து ஒரு முறை மட்டுமே வரலாம்.
- எல்லா கட்டங்களும் தன்னுள் ஒரு எழுத்து கொண்டிருக்கவேண்டும்.

தமிழ் சுடோகு மற்றும் விடுகதைகள் அளித்தது: நிலை:7 மாணவர்கள் + அபிராமி

எழுத்துக் குவியல்: சுந்தர்

சென்ற இதழின் குறுக்கெழுத்துப் போட்டி விடை:

	தி	ரு	வ	ள்	ளு	வ	ர்		ம	ண்			ப	
	ங்					ண		வ			ள	ஞ்	ச	ல்
	க				ச	க்	க	ர	ம்		று		ங்	
ப	ள்	ளி				க		வு			கா	ன	க	ம்
ற			தொ	ட	ரு	ம்		செ	வ்	வா	ய்			
வை	க்	கோ	ல்					ல		ழ்				கு
க		ல				உ	ற	வு		த்			மு	ழு
ள்		ம்		ப		ற்				து			ய	
			க	லா	ச்	சா	ர	ம்		க	ப்	ப	ல்	
க	ங்	கா	ரு			க				ள்		ட்		
			ம்		மா	ம்	ப	ழ	ம்		கு	ட	ம்	
எ	று	ம்	பு		ன்		ல					ம்		

அதிவிரைவாகவும் சரியாகவும் விடைகள் சமர்ப்பித்த **பஷீர், பியூலா, அனிதா** ஆகியோருக்கு வாழ்த்துகள்!!

விடுகதைகள்:

1. ஒரு
2. சாலையோரம்
3. மாமரத்திலே
4. கதிர்
5. நிறம்
6. சிலை
7. நிலா
8. ஒழுங்கு
9. சுமைதாங்கி
10. கரை
11. குழந்தையிடம்

நிறைவாக .....

இந்த மின்னிதழ் உங்களுக்கு ஒரு இனிய அனுபவத்தைத் தந்திட நாங்கள் முழுமையாய் முயற்சித்துள்ளோம். அதன் விளைவாய் உங்களுக்கு ஒரு புதிய சுகானுபவம் கிட்டியிருக்கும் என நம்புகிறோம்.

கெடுவாய்ப்பாக, எதேனும் உங்கள் மனதை பாதித்திருந்தாலோ, மனம் புண்படும்படி அமைந்திருந்தாலோ வருந்துகிறோம். உங்களது புகார்களை/ மேலதிக கருத்துகளைக் கீழ்க்கண்ட மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம். அதுபோல், உங்கள் பாராட்டுகளையும் எங்களிடம் பகிர்ந்து எங்களுக்கு உற்சாகமூட்டலாமே.

நீங்கள் விரும்பும், தமிழ் உலகிற்குப் பயனளிக்கும் வேறு பல விடயங்கள் இந்த மின்னிதழில் சேர்த்திட எங்களைத் தொடர்புகொள்ளுங்கள். நிச்சயம் செவி சாய்ப்போம். நன்றி.

வேண்டுகோள்:

இந்த மின்னிதழ் நம் மொழி சார்ந்தும் நம் பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், தன்னார்வலர்கள் ஆகியோரது படைப்புகளைத் தாங்கியும் வலம் வரும்.

உங்களது படைப்புகள் இதில் இடம் பெற ஆசிரியர் பக்கம் பகுதியிலுள்ள எங்கள் குழுவில் ஒருவரையோ அல்லது கீழே உள்ள மின்னஞ்சல் முகவரியையோ தொடர்பு கொள்ளுங்கள்.

மின்னிதழ் குழு தொடர்புகொள்ள:

emagazine@mktamil.org

http://www.mktamil.org/

https://www.facebook.com/groups/MKTamilSchool

